பக்கங்கள் 8 விலை சதம் 40 ★ ★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 16 ஐ. அவ்: 8 இதழ்: 76
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-4-

## கருணாநிதிக்கு பாஸ்போர்ட் கிடைப்பதில் தாமதம்

கொழும்பு, புதன்

அனைத்திந்திய அண்ணா தி. மு. கழக பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தந்தை செல்வாவின் இறுதி அஞ்சலியில் கலந்து கொள்ள வருவது நிச்சயம் என்று தெரிய வருகிறது.

எம். ஜி. ஆருக்கும், மக்கள் தி. மு. க. பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியனுக்கும் பாஸ்போர்ட் கிடைத்து விட்டதாகவும், ஆனால் தி. மு. கழகத்தலைவர் திரு மு. கருணாநிதிக்குத்தான் பாஸ்போர்ட் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தந்தை செல்வாவுக்கு நேரில் அஞ்சலி செலுத்தற்கு வர முடியாவிட்டாலும் இரங்கல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகுதல் வருவதற்கு திரு. கருணாநிதி ஆர்வம் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.


இவர்கள் மூவரும் விஸா இன்றியே செல்வாவின் இறுதி அஞ்சலியில் வந்து கலந்து கொள்வதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியிருப்பதாகவும் தெரிகின்றது.

### கனடாவிலிருந்து மகள் வருகிறார்

கனடாவிலுள்ள தந்தை

(7ம் பக்கம் பார்க்க)





தந்தை செல்வாவின் பூதவுடலுக்கு யாழ். பெரியாஸ்பத்திரியில் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினமும் பொது மக்களும் அஞ்சலி செலுத்துவதையும், தந்தையின் உடலை தனயன் சந்திரகாசன் கூட்டணித் தலைவர்களிடம் ஒப்படைக்கையிலும், யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்களும், ஊழியர்களும் பூதவுடலை சுமந்துவருகையிலும் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (படங்கள்: பிரபா போட்டோ 'தேவா')

# தந்தைக்கு அஞ்சலி செலுத்த பிரதமர் இன்று வருகிறார்

## இறுதி யாத்திரையில் எம். ஜி. ஆர்., நாவலர்

### தமிழ்ப் பகுதிகள் ஒரே சோகமயம்

யாழ்ப்பாணம், வியாழன்

மறைந்த தலைவர் மூதறிஞர் செல்வநாயகத்துக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்துவதற்காக பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று காலை எட்டரை மணியளவில் விசேஷ விமானத்தில் வருகின்றார்.

### எம். ஜி. ஆர்., நெடுஞ்செழியன் வருவது உறுதி

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், மக்கள் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் இங்கு வருவதும் இப்பொழுது உறுதியாகிவிட்டது. தி. மு. கழகத் தலைவர் மு. கருணாநிதி பாஸ்போர்ட் பெறுவதில் பிரச்னை ஏற்பட்டுள்ளதாகவும் இருந்தபோதிலும் இங்குவர அவர் தீவிர முயற்சிகள் மேற்கொள்வதாகவும் சென்னையிலிருந்து கிடைத்த தொலைபேசிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மறைந்த மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு தமது இறுதி அஞ்சலியை நேரில் செலுத்த கிழக்கு மாகாண மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். தந்தையின் பூதவுடலை திருகோணமலை, மட்டக்களப்புக்கு ஆகிய இடங்களுக்கு கொண்டு வரும்படி அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை திருமதி செல்வநாயகம் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் ஏற்க விரும்பாத நிலையில் கைவிடப்பட்டதாக திரு. ஏ. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் தெரிவித்தார். கிழக்கு மாகாணம், மலைநாட்டுப் பகுதிகள் யாவும் ஒரேசோகமயமாகக் காட்சிதருகிறது. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. பொது இடங்களிலும் மற்றும் மோட்டார் வாகனங்களிலும் தந்தை செல்வாவின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. பேராசிரியர் திரு. சு. வித்தியானந்தன் தலைமையில் பேராதனை வளாகத்திலிருந்து மாணவர் கோஷ்டியொன்று பஸ்ஸில்

(7ம் பக்கம் பார்க்க)

நேற்று அதிகாலையிலிருந்து ஆண்களும் பெண்களுமாகப் பெருந்திரளானோர் கைகளில் மலர்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று மறைந்த தலைவரின் பாதத்தில் வைத்து தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

### 'ஐயா' என்று மயங்கி விழுந்தார்

காலையில் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு ஆஸ்பத்திரிக்கு சைகிளில் விரைந்து வந்த ஒரு

7-ம் பக்கம் பார்க்க

### நேமிநாதன், தங்கத்துரை, சம்பந்தர் வந்தனர்

யாழ்ப்பாணம், வியா.

தந்தை செல்வாவின் பூதவுடலை தரிசிக்கும் பொருட்டு திருமலை எம். பி. திரு. பி. நேமிநாதன், மூதூர் எம். பி. திரு. ஏ. தங்கத்துரை, திருமலையில் த. வி. கூ. சார்பில் போட்டியிடவிருக்கும் திரு. சம்பந்தர் ஆகியோர் கார் ஒன்றில் வந்து கொண்டிருந்தபோது கார் நுணாவிலில் சிறு விபத்துக்குள்ளாகியது. எனினும் பாதிப்பு எதுவும் இன்றி மூவரும் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர். (உ

### சனிக்கிழமை வரை

## கடைகளை மூடாதீர் 'அமிர்' வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வியா.

தந்தை செல்வாவின் இறுதிக் கிரியைகள் நடைபெறும் தினமாகிய எதிர்வரும் சனிக்கிழமைவரை யாழ்ப்பாணம் நோக்கி பல வெளியிடங்களில் இருந்துவரும் பொதுமக்களின் நலன் கருதி யாழ்ப்பாணப் பகுதியில்உள்ள தேநீர்க்கடைகள், உணவுச் சாலைகள் என்பன திறந்தே இருக்கவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மாணவர் அஞ்சலி

வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணியில் இருந்து 11 மணி வரை பாடசாலை மாணவ, மாணவியர் தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைச் சிற்பியும்,
தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவனும்,
தமிழரசுத் தந்தையும்
ஈழத்துக் காந்தியும் ஆகிய
அமரர் மூதறிஞர்

## உயர்திரு சா. ஜே. வே செல்வநாயகம்

அவர்களுக்கு

அஞ்சலியாகக் கொடிகள் அச்சிட்டு இலவசமாகவழங்க நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.
கொடிகள் வேண்டுவோர் துணியை மட்டும் கொண்டுவருக!

# நியூ வசந்தா பிறிண்டிங் ரெக்ஸ்ரைல்

248/1, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7732
6038

# நல்லூர்

# ப. நோ. கூ. சங்கம்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால் மூலம் 6-5-1977க்கு முன்னர் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## 1. பொதுமுகாமையாளர் தரம் 3

கல்வித்தகைமைகள்:

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்றுள்ள பட்டதாரி.
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தர தராதரப்பத்திரம்.
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னை நாட் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது
4. ரூபா 20,00,000 இனைவருடாந்த மொத்த விற்பனவாகக்கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 3 வருட கால அனுபவமுடைய ஒருவர்.

வயது: 28 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் — 340 — 590 ............ 15×10, 20×5

## 2. நுகர்ச்சி முகாமையாளர் தரம் 3

கல்வித் தகைமைகள்:

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. கூட்டுறவு வேலையாளர் (உயர்தர) தராதரப்பத்திரமும் ஒரு வருட கால அனுபவமும் அல்லது
3. கூட்டுறவு வேலையாளர்(சாதாரணதர) தராதரப் பத்திரமும் மூன்று வருடகால அனுபவமும்.

வயது: 28 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் — 300 — 500 ............ 12·50×10, 15×5

## 3. அகநிலைக் கணக்காய்வாளர் தரம் 2

கல்வித்தகைமைகள்:

1. கூட்டுறவு வேலையாளர் (உயர்தர) தராதரப்பத்திரமும் வர்த்தக எண்கணிதம் அல்லது எண் கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தர) சித்தியும் ஒரு வருடகால அனுபவமும் அல்லது
2. கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் (சாதாரண தர) தராதரப்பத்திரமும், வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் அல்லது எண்கணிதம் உட்பட 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண தர) சித்தியுடன் ஐந்து வருட கால அனுபவமும்
3. ஒரு வருட கால அனுபவத்துடன் கனிஷ்ட சர்வ கலாசாலையில் எண்பார்வையிடுதலில் பெற்றுள்ள டிப்ளோமா.
4. 5 வருட கால அனுபவம் உடைய கூட்டுறவுப் பரிசோதகர்கள்.

வயது: 25 வயதிற்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் — 300 — 500 ............ 12·50×10, 15×5

## 4. பொது லிகிதர் தரம் 1

கல்விததகைமைகள்:

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. பொது எழுதுநர் தரத்திலுள்ள தரம் 2 பதவியில் ஐந்து வருட கால அனுபவம்.

வயது: 28 வயதிற்குக் குறையாதவராயிருத்தல் வேண்டும்.

சம்பளம் — 300 — 490 ............ 10×10, 15×6

தலைவர்,
**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,**
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1977-04-25. 6032

# விளம்பரம்

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம்பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரங்கள்மூலம் விரபனைக்குண்டு. இவற்றை மே மாதம் 2ந் கேதி திங்கட்கிழமை பி.ப. 1மணிக்கு முன்னர் கேள்விப்பத்திர முற்பணம் ரூபா ஐம்பதும், விண்ணப்பபத்திரததிற்கு 2ரூபாவுமாக மொத்தம் 52 ரூபா தலைமைக்காரியாலயத்தில் கட்டிக் கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் மே மாதம் 6-5-77 வெள்ளிக்கிழமை மு. ப. 12 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவுத்தபாலின் இடது மூலையில் வெற்றுச்சாக்கு விண்ணப்பம் என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ப. குகதாசன்
வ.கி.வ.ப.ப.நோ.கூ. சங்கம்,
அச்சுவேலி.
6028

# WANTED

One Welder (Electrical & Gas)
One Black Smith
One Labourer
One night Watcher (preferably a retired man from uniformed service)
Apply on or before 4th May, 1977.
To Advt. No. 6035,
C/o Eela Nadu, Jaffna.
6035

# கல்லூரிகள் இன்றுஇல்லை

யாழ்ப்பாணம், வியாழன்
செல்வாவின் மறைவையொட்டி, இரட்டாம் தலை ஆரம்பநாளான இன்று யாழ். இந்துக்கல்லூரி உட்பட நகரின் பிரபல கல்லூரிகள் நடைபெறுதென்று கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ். இந்து உட்பட இக்கல்லூரிகள் மீண்டும் அடுத்தமாதம் 5-ம் திகதியே திறக்கப்படுமெனத் தெரிய வருகிறது. இக்கல்லூரிகளில் தற்போது ஜி. ஸி. ஈ. உயர்பரீட்சை நடைபெற்று வருகிறது. (கு-அ)

• • •

# ஒற்றுமையைக் காப்போம்

நெருக்கடிமிகுந்த காலகட்டத்தில் எம்மை கண்ணீரில் ஆழ்த்திவிட்டு எமது அருந் தலைவர் தந்தைசெல்வா பிரிந்து விட்டார்.

தந்தையின் இலட்சியங்களை அடைவதற்காக, அவர்கள் கட்டி வளர்த்த இன் ஒற்றுமையைப் பேணிப் பாது காப்போமாக. என்று தமிழ்இளைஞர் பேரவையின் யாழ். ஆரும் வட்டாரக்கிளை விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது. (கி.அ)

# விளம்பரத் திருத்தம்

மானிப்பாய் கி. ச. விசேட ஆணையாளரால் 26-4-77ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் வெளியான கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி 12-5-77-ம் திகதி காலை 10-00 மணி வரையாகும். 6036

### கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடங்கள்

## பொதுமுகாமையாளர் தரம் II

500—825 ............ 20 × 10, 25×5

**தகைமைகள்:**

1. கூட்டுறவுப் பயிற்சியுடன் மூன்று வருட காலம் அனுபவமுடைய பட்டதாரி.
2. இரண்டு வருடகால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர்தராதரப் பத்திரம் உடைய பட்டதாரி அல்லது
3. தரம் III பதவியொன்றில் ஒரு வருட கால அனுபவமும் கூட்டுறவு வேலையாளர் உயர் தரத் தராதரப் பத்திரம்பெற்றுள்ள பட்டதாரி.
4. 50 இலட்சம் ரூபா வருடாந்த மொத்தவிற்பனையாக கொண்ட வியாபாரத் தாபனமொன்றின் மேல் முகாமையாளர் பதவியொன்றில் 5 வருட கால அனுபவத்தினையுடைய ஒருவர்.
5. 10 வருடகால அனுபவமும் பொருந்திய முன்னையநாட் கூட்டுறவு பரிசோதகர்.
6. 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்.

## கணக்காளர் தரம் II

400 — 650 ............ 15×10, 20×5

1. ஒரு வருட கால அனுபவத்துடன் கணக்கியலினை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி,
2. ஒருவருடகால அனுபவத்துடன் கொழும்பு சிரேட்ட தொழில்நுட்பக்கல்லூரியில் கணக்கியலில் பெற்ற டிப்புளோமா
3. கூட்டுறவு வேலையாளர் உயர்தரத்தராதரப் பத்திரத்துடன் அத்தகைய ஓர் நிறுவனத்தில் பெற்றுள்ள இரண்டு வருடகால அனுபவம்.
4. 7 வருடகால அனுபவம்பொருந்திய முன்னை நாட் கூட்டுறவு பரிசோதகர்.
5. வயது 25க்கும் 45க்கு உட்பட்டவர்.

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில், காகிதஉறையின் இடதுபக்கமூலையில் "..............பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்பட்டு, 14-5-1977ந் திகதிக்கு முன் "தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பாரந்தன்" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம்,
பாரந்தன்.
1977-04-26 6033

# வரி விளம்பரம்

## தேவை

நல்லூருக்கு அண்மையில் உள்ள சிறு கைத்தொழில் நிலையத்திற்கு 25 வயதிற்கு உட்பட்ட பெண்பிள்ளைகள் தேவை. சித்திரம் வரைதல், கைப்பணி வேலைகளில் திறமை உள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பரஇல: 6016, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6016

கடைச்சல் வேலை தெரிந்த அனுபவம் உள்ள ஆள் உடன் தேவை. நேரில் வரவும். செனித்வாட்ஸ்கொம்பனி, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 6030

## விற்பனைக்கு

நான்கு அறைகள், இரண்டு ஹோல்கள். இரண்டு சமையலறைகள், டிறெயினேஜ் மலசல கூடங்களிரண்டு, குழாய் நீர் வசதி மற்றும் சகல வசதிகளும் கொண்ட இரண்டாகப் பிரிக்கக்கூடிய கன்னாதிட்டி வீதி 16ம் இலக்க நவீன இல்லம் முழுவீடாகவும் பாதிவீடாகவும் விற்பனைக்குண்டு. பிரயோசனங்கள் உள்ள வளவும் உள்ளது. தொடர்பு - 16, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 6027

மிளகாய் குருமன் நோய்க்கு தண்ணீரில் கரைத்துத் தெளிக்கப்படும் சல்பர் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கையிருப்பில் சிறிதளவே தற்போது உள்ளபடியால் முந்திக்கொள்ளவும். 'இரத்தினசிங்கம்ஸ்', பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 6026

## ஆட்சி—

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கும். ஆனால் அன்றைய எமது தமிழ்த் தலைவர்கள், தமிழ் அதிகாரிகள் ஆங்கிலத்தைப் படித்து ஆங்கிலத்திலே பதவிகள் வகித்து ஆங்கில மோகத்தில் ஆங்கிலத்தைப் பாதுகாக்க முனைந்ததால்தான் அன்று தமிழ்மொழிக்கு உரிய இடம் ஏற்படுத்தப்படவில்லை. சிங்கள மொழி உணர்வு ஏற்பட்டதும் ஆங்கிலத்துக்கு ஏற்பட்ட தாக்கத்தைக்கண்டு சகிக்கமுடியாத சிலர் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்க தமிழ் மக்களைப் பயன்படுத்தினர். இப்படிப் பயன்படுத்தி வகுப்புவாதத்தை வளர்த்து தமிழ்மொழிக்கு இருக்கவேண்டிய அந்தஸ்தைக் குறைக்க முயன்றதைவிட சிங்களமொழி ஆர்வம் ஏற்பட்ட சிங்கள மக்களுடன் சேர்ந்து தமிழ் மொழிக்காக தேசிய ரீதியில் ஆங்கில ஆதிக்கத்தைக் குறைக்க முற்பட்டிருந்தால் இன்று எமது மொழிநிலை இந்தளவு இழிநிலைக்கு வந்திருக்கமுடியாது.

புங்குடுதீவு இணக்கசபைத் தலைவர் திரு. எஸ். தில்லைநாதனும் பேசினார். (அ)

......

# "தேசிய துக்க தினமாக்குக"

யாழ்ப்பாணம், வியாழன்
தமிழ் மக்களின் ஈடிணையற்ற தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவையொட்டி அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும் தினத்தை தேசிய துக்கதினமாக அறிவிக்கும்படி 'செவ்வந்தி' சஞ்சிகையின் ஆசிரியரும் சட்டக்கல்லூரி மாணவருமான திரு பா. தவபாலன் பிரதம மந்திரிக்கு தந்தியொன்றை அனுப்பியுள்ளார்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

மாப்பிள்ளைக்குக்காணி! குடும்பத்துக்குவீடுகள்!! தேர்தலுக்கு பணம்வசூல்!!!

# கர்நாடக காங்கிரஸ் முதல்வர் சகமந்திரிகள் மீது ஊழல் புகார்

## 40 எம். எல். ஏ. க்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்

புதுடில்லி, ஏப். 27

**தமது மாப்பிள்ளைக்கு அரசின் அனுமதியின்றி அரசுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணியை வழங்கியதுடன் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் அரசுக்குச் சொந்தமான நான்கு பெரிய வீடுகளை எவரினதும் அனுமதியின்றி தாமாகவே எடுத்துக்கொண்டதாக கர்நாடக முதன்மந்திரி திரு. தேவராஜ் அர்ஸ் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

**திரு. தேவராஜின் மந்திரிசபை சகாக்கள் சிலர்மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.**

கர்நாடக சட்டசபையின் 46 உறுப்பினர்கள் முதன் மந்திரி மீதும் அவரது மந்திரிசபை சகாக்கள் சிலர்மீதும் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கும், உள்துறைஅமைச்சர் திரு. சரண்சிங்குக்கும் அந்த உறுப்பினர்கள் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

### தேர்தலுக்கு நிதி சேர்த்தனர்

இவ்வருடம் மே மாதம் நடைபெறுவதாக இருந்த மதுக்கடை ஏலவிற்பனை, தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சிக்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் முன்கூட்டியே லோகசபைத் தேர்தலுக்கு முன்னர் அவசர அவசரமாக நடத்தப்பட்டது என்பது உட்பட மேலும் பல குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

### 100-க்கும் அதிகமான குற்றச்சாட்டுக்கள்

திரு. தேவராஜ்மீது ஏற்கனவே நூற்றுக்கும் அதிகமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. (இ)

---

## காங்கிரஸிலிருந்து ராஜினமா

புதுடில்லி. ஏப். 27

காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த இரண்டு ராஜ்யசபை உறுப்பினர்கள் நேற்று காங்கிரஸிலிருந்து ராஜினமாச்செய்து தாம் ஜனதாக் கட்சியில் சேர்ந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

மத்தியப் பிரதேச முன்னுள் அமைச்சர் ஒருவரும் காங்கிரஸிலிருந்து விலகி ஜனநாயக காங்கிரஸில் சேர்ந்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் நான்கு சட்டசபைஉறுப்பினர்கள் காங்கிரஸிலிருந்து விலகி ஜனநாயக காங்கிரஸில் சேர்ந்துள்ளனர். (இ)

---

## தி.மு.க விலிருந்து ராஜினமா

சென்னை, ஏப். 27

முன்னுள் தி. மு. க. சட்டசபை உறுப்பினர் திரு. எஸ். இராஜமாணிக்கம் தி. மு. க. விலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

தாம் மக்கள் தி. மு. க. வில் சேரவிரும்புவதாக அவர் தெரிவித்தார். (இ)

...

## ஆலயம் புனருத்தாரனம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஆவரங்கால் நடராசராமலிங்கம் சுவாமி கோவில்விரைவில் புதுப்பொலிவுடன் திகழவிருக்கிறது இவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்வதற்கான ஏற்பாடுகள்நடைபெற்று வருகின்றன.

ஈழத்தின் பல பகுதியையும் சேர்ந்த சைவப் பெரியார்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இத்திருப்பணி வேலைகள் இன்று தொடங்கப் படவுள்ளன. (அ)

......

## தட்டுப்பாடு

பண்டத்தரிப்பு, புதன்

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் முத்திரையுடன் கூடிய தபால் கவர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுபற்றி அங்கு கடமையாற்றும் அதிகாரிகளுடன் விசாரித்தபோது தபால் முத்திரைக் கவர்களை அனுப்பி வைக்கும்படி மேலிடத்தைகேட்டிருப்பதாகவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

அளவெட்டி தபால்கந்தோரிலும் முத்திரையுடன் கூடிய தபால்கவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [இ]

---

‘ராமலீலா’ வழக்கு:

## ஈ.வெ.ராவின் மனைவியும் 13 எதிரிகளும் விடுதலை

சென்னை, ஏப். 27

திராவிடர் கழகத் தலைவியான திருமதி மணியம்மைக்கும் மற்றும் 13 பேருக்கும் எதிராகத் தொடரப்பட்டிருந்த ‘ராமலீலா’ வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது.

ராமர் எதிர்ப்பு நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுள்ளதால் இவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ‘ராமலீலா’ வழக்கு என்று அழைக்கப்பட்டது.

இவ்வழக்கு கீழ் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டபோது எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்ட நீதிபதி தலா 700 ரூபா அபராதம் அல்லது தலா 6மாத சிறைத்தண்டனை என்று தீர்ப்பு வழங்கியிருந்தார்.

எதிரிகள் உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்ததையடுத்து நடைபெற்ற விசாரணையில் எதிரிகள் நிரபராதிகள் எனக் கூறி வழக்கைத் நீதிபதி தள்ளுபடிசெய்தார். (உ)

---

## மத்திய அரசு விபரம் கோரியுள்ளது

புதுடில்லி, ஏப். 27

கர்நாடக முதல்வர் மீதும் அவரது சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீது தொடர்பாக மத்திய அரசு கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸிடம் விளக்கம் கோரியுள்ளது.

இதே வேளையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முதல்வரும் சகாக்களும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று கர்நாடக சட்ட சபையின் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

---

## இந்தியப் பிரதமருக்கு ரஷ்யா அழைப்பு

புதுடில்லி, ஏப். 27

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஷ்னேவ் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு வந்துள்ள சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு குரோமிக்கோ மூலம் இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

திரு. குரோமிக்கோ திரு. பிரஷ்னேவின் விசேட செய்தியுடன்நேற்று திரு. மொரார்ஜியைச் சந்தித்து ஒருமணிநேரம் வரை உரையாற்றினர். அப்போதே திரு. பிரஷ்னேவின் அழைப்பை பிரதமரிடம் திரு. குரோமிக்கோ கொடுத்தார்.

அழைப்பைஏற்றுக்கொண்ட திரு. தேசாய், திரு. பிரஷ்னேவையும், ஜனதிபதி திரு. கொஸிஜினையும் இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

### வாஜ்பாய்க்கும் அழைப்பு

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாயியுடன் பேச்சுவார்த்தை நடத்திய திரு. குரோமிக்கோ அவரையும் ரஷ்யாவருமாறு அழைப்பு விடுத்தார். (இ)

---

9 மாநில அரசு கலைப்பு விவகாரம்

## அரசியல் பிரச்னையா; அரசியல்சாஸனம்பற்றியதா?

### உயர்நீதிமன்றம் விசாரணை

புதுடில்லி, ஏப்.27

காங்கிரஸ் படுதோல்வி அடைந்த 9மாநில அரசுகளையும் கலைப்பது தொடர்பான பிரச்னை அரசியல் பிரச்னையா, அல்லது அரசியல் சாசனம் சம்பந்தப்பட்டதா என்பது குறித்து நேற்று சுப்ரீம் கோர்ட்டில் ஆராயப்பட்டது.

இது அரசியல் பிரச்னையானுல் நீதிமன்றத்திற்கு அதில் தலையிட உரிமை இல்லை என்று நீதிபதி திரு.சந்திருர் தெரிவித்தார்.

இது அரசியல் சாஸனப் பிரச்னை அல்ல என்றும் அரசியல் சாஸன உரிமைகளுக்குக் கிடைத்துள்ள மிரட்டல் என்றும் மாநில அரசுகளின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

### ஒரிஸ்ஸாவும் மனு

மத்திய அரசின் இந்த யோசனைக்கு எதிராக ராஜஸ்தான்,பீகார், மத்திய பிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுடன் ஒரிஸ்ஸாவும் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. (இ)

---

## கேரளத்தில் புதிய மந்திரிசபை

திருவனந்தபுரம், ஏப் 27

கேரளத்தில் ஏ. கே. அன்ரனி தலைமையிலான 15 உறுப்பினர்கள் கொண்ட புதிய மந்திரிசபை ஒன்று இன்று காலை பதவி ஏற்றுக் கொண்டது.

கேரள என்ஜினியரிங் கல்லூரி மாணவர் ராஜன் சிறையிலிருந்து காணுமற்போனதை அடுத்து அங்கு ஏற்பட்டுள்ள அரசியல்நெருக்கடியினுல் பதவியிலிருந்த முதன் மந்திரி திரு கருணகரன் ராஜினமாச் செய்திருந்தார்.

திரு. கருணகரனின் மந்திரி சபையிலிருந்த 14 உறுப்பினர்களும் புதிய மந்திரி சபையில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

---

காங்.சட்டசபை கலைப்புப் பிரச்னை:

## “அரசியல் சாஸன அடிப்படையிலேயே மனு தாக்கலாகியுள்ளது”

### சிரேஷ்ட வழக்கறிஞர் வாதம்

புதுடில்லி, ஏப். 27

காங்கிரஸ் மாநில சட்டசபை ராஜினமாப் பிரச்னை தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு அரசியல் அடிப்படையானது அல்ல, - அரசியல் சாஸனம் தொடர்பானது” என்று சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கேட்டபோது ராஜஸ்தான், பீஹார் மாநில அரசுகள் சார்பான சிரேஷ்ட வழக்கறிஞர் கூறினர். ஒன்பது காங்கிரஸ்சட்டசபைகள் கலைக்கப்பட வேண்டும் என்ற மத்திய அரசின் ஆலோசனைக்கு எதிராக ராஜஸ்தான், பீஹார் உட்பட நான்கு மாநிலங்கள் இம்மனுவைத்தாக்கல் செய்துள்ளன.

இம்மனு மீதான விசாரணை இன்று சுப்ரீம் கோர்ட்டில் தொடர்ந்து நடைபெற்றது.

### சி. எஸ். சொல்கிருர்

இதேவேளை மத்திய அரசின் இந்த ஆலோசனை அரசியல் சாஸனத்தினை அரசாங்கம் தன்னிச்சையாக நடத்த முற்படுவதை எடுத்துக்காட்டுகிறது என்று முன்னுள் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சங்க மாநாட்டில் பேசுகையில் கூறினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## விண்வெளியில் ‘ஸல்யூட் -5’

### 10 மாதங்கள் ஆய்வு

மாஸ்கோ, ஏப்.24

சோவியத் விஞ்ஞான ஆய்வு நிலையமான ‘‘ஸல்யூட்’’ பத்தாவது மாதமாகத் தனது அண்டவெளி ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

‘‘ஸல்யூட்-5’’ 1976 ஜூன் 22-ல் அண்டவெளியினுள் செலுத்தப்பட்டது.

‘‘ஸல்யூட் 5’’ பூமியைச்சுற்றி 4,888வது தடவைகள் வலம் வந்துள்ளது.

இந் நிலையத்தின் ஆய்வு அமைப்புகளும், கருவிகளும் சகஜ நிலையில் இயங்கி வருகின்றன என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (இ)

---

## ‘ஹரிஜனக் குழந்தைகள் என்னைவரவேற்கவேண்டும்’

### புதிய தமிழக ஆளுநர்

சென்னை, ஏப்ரல் 26

தமிழ்நாடு புதிய ஆளுநராக திரு. பட்வாரி நாளை பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவிருக்கிருர்.

சென்னை உயர் நீதிமன்ற பதில் நீதிபதி இப் பதவிப் பிரமாணத்தைச் செய்துவைப்பார்.

தமக்கு பதவிப் பிரமாணத்தின் போது அளிக்கப்படும் வரவேற்பு எளிய விதத்தில் அமைய வேண்டும் என்றும் தம்மை வரவேற்பதற்கு ஹரிஜனக் குழந்தைகள் அல்லது பிற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் பெருமளவில் வரவேண்டுமென புதிய ஆளுநர் விருப்பம் தெரிவித்துள்ளார். (உ)

## மணிவாக்கு

கோடிமக்கள் பொய்யினராயிருந்தாலும் ஒரு பூரண மனிதனுல் அத்தனை பேரின் பொய்யையும் அகற்ற முடியும்,

—காந்திமகான்.

ஈழநாடு
THE EELANADU

# சோதனைமேல் சோதனை

மெலிந்த உருவம்; தளர்ந்த நடை, திட்சண்யமான பார்வை; அமைதியானபேச்சு, ஆனல் வைரம் கொண்ட நெஞ்சம்.

தமிழ்; தமிழ்மக்கள்; தமிழ்த்தேசம்.

இவையே அந்த உருவத்தின் சிந்தனை.

கடந்த கால்நூற்றுண்டு காலமாக இதே சிந்தனையுடன் ஈழத்தில் தமிழ் மக்கள் வாழும் மூலை முடுக்கெல்லாம் தளர்நடை போட்டு மக்களைத் தட்டியெழுப்பியது.

தமிழினத்தின் சாபக்கேடான தீண்டாமையை ஒழிப்பதற்கு அந்த உருவம் கிராமங்களில் திரிந்தது.

''சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்'' என்ற பழமொழிக்கொப்ப பிரதேசத்தைப் பாதுகாத்தால்தான் மொழியைப் பாதுகாக்கலாம்; இனத்தைப் பாதுகாக்கலாமென்பதை மக்கள் மனதில் பதிய வைத்தது அந்த உருவம்.

கிழக்கென்றும் வடக்கென்றும் பிரிந்து நின்ற மக்களை ஒன்றுசேர்த்து ஒரே குடும்பமாக்குவதில் வெற்றிகண்டதும் அந்த மெலிந்த உருவம் தான்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழவேண்டும்; வாழமுடியுமென்பதை எடுத்துக்கூறி மக்கள் உள்ளத்தில் சுதந்திரவேட்கையை உருவாக்கியதும் இந்த உருவமே.

சிறைசென்றது; தவமிருந்தது; யாத்திரை செய்தது.

இவற்றின் மூலம் தமிழ் மக்கள் தம்மையே உணர்ந்துகொள்ளச் செய்தது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சில வாரங்கள் அரசாங்க நிர்வாகமே ஸ்தம்பித்து நிற்கச்செய்த சக்தி இந்த மெலிந்த உருவத்திற்குத்தானிருந்தது.

அந்த உருவம் என்ன சொல்லப்போகிறது; என்ன செய்யப்போகிறது என்று தென்னிலங்கை அஞ்சக்கூடிய அளவுக்கு அதன் சக்தி மகத்தானதாக விருந்தது.

இந்தச்சக்தியை நன்குணர்ந்துகொண்டபின் தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவே வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

இதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தனர்.

வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாக அந்த மெலிந்த உருவத்தின் இலட்சியம் வலுப்பெற்று வந்துகொண்டிருந்த இந்தச்சமயத்தில் அந்த உருவம் இவ்வுலகை விட்டு மறைந்தது.

அரசியலில் எதிரிகளாயிருப்பவர்களும் கூட திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்ற அந்த மெலிந்த உருவத்தின் நேர்மைக்கும் பண்புக்கும் உறுதிக்கும் தனி மதிப்பு அளித்தனர்.

யார் இட்ட சாபமோ இறைவன் சோதனையோ!

திரு. திருச்செல்வத்தை இழந்த சோகம் தீருமுன் தலைவர் ஜி. ஜி. யின் மறைவைத் தாங்கவேண்டிய நிலை தமிழினத்துக்கு ஏற்பட்டது.

இப்போது தமிழ் இனத்தின் ஒளிவிளக்காம் தந்தை செல்வநாயகத்தையும் பறிகொடுத்து நிற்கிறது, ஈழத் தமிழினம்,

சோதனைக்குமேல்சோதனை ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் தெய்வம்தான் துணை.

திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணையல்லவா!

# இறவாத பைந்தமிழர் கோமானே!

இதயத்திற் கலந்துவிட்ட
எம் தந்தை செல்வாவை
இழந்தோமே! இழந்தோமே! — ஐயயோ
இழந்தோமே! இழந்தோமே!

உதயத்தின் சூரியனாய்
உயிர்தமிழ்க் காவலனாய்
உறங்கினாய்! உறங்கினாய்! — தமிழ்
உலகமே கலங்குதே!

விதைத்தஉன் முன்னே தானாய்
விளைகின்ற பயனுக்குள்
விண்ணுலகம் போனாயே! — எந்தம்
வேதனையை அறியாயோ?!

பதைபதைப்புக் கொள்கின்றோம்!
பரிதபித்து அழுகின்றோம்!
பைந்தமிழர் கோமானே! — இறவாத
பைந்தமிழர் கோமானே!

— புலவர் "வேல்மாறன்"

# ஈழத்தமிழர்

பேச்செல்லாம் தமிழ் மொழியின் பெருமை பேசி, பெற்றதெல்லாம் தமிழ்த் தாயின் பெற்றியென்றும், மூச்செல்லாம் தமிழரசு காணும் மூச்சே வாங்கி முற்றுமவள் திருப்பணிக்கே மூச்சுவிட்ட தமிழரசுத் தந்தைசெல்வா அமரராகி விட்ட செய்தி ஈழத் தமிழர்களுக்கும், உலகத் தமிழர்களுக்கும் ஈடுசெய்யமுடியாத நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது.

எண்பதாவது வயது ஆரம்பத்தில் எடுத்தடிவைத்தழுதறிஞர் செல்வா கடந்த 30 ஆண்டுகளாக ஈழத் தமிழ்மக்களின் இதயகீதமாக விளங்கிஇன்னல் பல அடைந்தும், கைப்பொருளைச் செலவிட்டும் ஈழத்தமிழர் ஒற்றுமையையும் தமிழ்ஈழ விடுதலை உணர்வையும் ஏற்படுத்தி அமரராகிவிட்டார்.

நறுமணம் கமழும் வீட்டு ரோஜா போன்று கிட்டநின்று பார்ப்போருக்கும் எட்டநின்று பார்ப்போருக்கும் தமிழ்ஈழக் கொள்கைமணம் தந்து நின்றவர் செல்வா

நாம் எவ்வாறு நம் மனதை வைத்துக்கொண்டு அவரைப் பார்க்கிறோமோ அவ்வாறெல்லாம் மணக்கும் மனோரஞ்சிதக்காய் செல்வா.

தூரநின்று பார்ப்பவர்களும் கிட்டவந்து பார்த்தால் மணமும் இனிமையும் தரும் முக்கனி செல்வா.

ஈழத்தில்மிகவும்பெயர்பெற்ற ராணி அப்புக்காத்தாக விளங்கும் அவர் நீதியரசராகப்புகழுடனும் பெருமையுடனும் வாழவாய்ப்பிருந்தும் தமிழ்மக்கள் மொழியும் நாடும் காக்க முன்வந்தவர் செல்வா.

பலம் வாய்ந்த கட்சியின் தலைவர், பாராளுமன்றப் பிரதிநிதி, ஸ்ரீமாவோ அரசையும், டட்லிஅரசையும் ஆட்சியில் வைக்க ஆதரவு தந்தபோதும் மந்திரிப்பதவி வேண்டுமென்று பேரம்பேசி அறியாத பண்பாளர் செல்வா.

எண்பது வயதை எட்டிப் பிடித்தாலும், தள்ளாதவயதிலும், தமிழ், தமிழன், தமிழ்நாடு என்று கொண்ட கொள்கைக்காக வாழ்ந்த பெரியவர் செல்வா.

கத்தியின்றி இரத்தமின்றி தமிழ்மக்களைச் சுதந்திரம்காண வழிநடத்திச்செல்லும் புரட்சித் தீ செல்வா.

சீறிவந்த சிங்களப் பிரளயத்தை ஈழத்தமிழகத்தில் கட்டுடைத்துக் கரைபுரண்டோட விடாமல் இன்றுவரை அணை கட்டிக்காத்த காவல் தெய்வம் செல்வா.

அறிவு, ஆண்மை, திண்மை, பெருமையாகியநான்குபண்பு [illegible] வாய்த்து, பிளேட்டோவின் தத்துவப்படி முழு மனிதனைக வாழ்ந்தவர் செல்வா.

ஈழத்தமிழகத்தில் மாத்திரமல்ல, வெளியுலகத்திலும், தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் சுடர் விடும் சுலங்கரை விளக்கு செல்வா.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்த குடியாக வாழும் ஈழத் தமிழ் மக்களின் தலைவிதியை மாற்றியமைக்க அவதரித்தவர் செல்வா.

தமிழ் தேசிய இனத்தின் எண்ணங்கள், ஆர்வங்கள், அபிலாசைகள், இலட்சியங்கள் ஆகியவற்றின் மொத்த வடிவம் செல்வா.

தமிழ் மக்கள் இளைப்பாற நிழல் தந்து கொண்டிருந்த தானைத் தலைவர் செல்வா.

# இமயம் வீழ்ந்தது

பல நூறு ஆண்டுகளுக்குப் பின் ஈழத்தமிழ் மண்ணுக்குக் கிடைத்த மாபெரும் கொள்கைப் புதையல், வழிகாட்டி, முன்னோடி செல்வா.

இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்களின் இருதயக்கோவிலிலே மனிதருள் மாணிக்கமாகக் கோலோச்சும் கோமான் செல்வா.

சரித்திரத்தைப் படித்தோர் மத்தியில் சரித்திரத்தைப் படைத்தவர் செல்வா.

சாதி, மத, பிரதேச வேறுபாடுகளுக்குச் சவுக்கடி கொடுத்து சமபந்திப் போசனத்தை ஏற்படுத்தியவர் செல்வா.

சோம்பிக்கிடந்த தமிழ் மக்கள் சுதந்திரதாகம்கொண்டெழச் செய்தவர் செல்வா.

## புத்தொளி

ஓரடியாய், ஈரடியாய், ஒவ்வொன்றும் பொன்னடியாய் எடுத்துவைத்து ஈழத்தமிழகமெங்கும் சென்று உதயசூரியனாய் தமிழ்ஈழக் கொள்கையை பரப்பியவர் செல்வா.

எண்ணற்ற விடுதலை வீரர்களையும், தானைத்தளபதிகளையும் உருவாக்கிஈழத்தமிழினம் தலைநிமிர்ந்து நிற்கஉதவியவர் செல்வா.

செல்வத்துக்கு நாயகராய் பெயர்பெற்றும் தன் செல்வமெல்லாம் தமிழ் ஈழத்துக்குத் தந்து தனது தேட்டமனைத்தையும் தமிழருக்காகத் தியாகம் செய்தவர் செல்வா.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தமிழ்பேசும்மக்களுக்கேயுரிய பிரதேசங்கள் என்பதை சுதந்திரக்கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளும்படிவைதத பெருமைக்குரியவர் செல்வா.

படித்தவர்களிடத்திலும் பணக்கார உயர்சாதிப் பிரமுகர்கள் மத்தியிலும் சிக்கிக்கொண்டிருந்த ஈழத் தமிழ் நாட்டு அரசியலைச் சாதாரண தமிழ் மக்களிடம் கொண்டு வந்து அரசியல் விழிப்பை ஏற்படுத்தியவர் செல்வா.

தனிமனிதராக வல்லாமல் ஒரு சகாப்தமாக, தமிழ் சமுதாயத்தின் முப்பதுவருட வரலாறு செல்வா.

செல்வத்தினுல் சேர்க்கப்பட்ட செல்வாக்கன்றி தமிழருக்காற்றிய சேவையினுல் சேர்க்கப்பட்ட செல்வாக்காளர் செல்வா.

தமிழ் மக்களின் தனிஇயக்கம் செல்வா!

தமிழ் மக்கள் விஷயத்தில் இறுதிமுடிவெடுக்கும் பிரதம நீதியரசர் ஸ்தானத்தில் விளங்கியவர் செல்வா.

நிதானமாக, ஆழமாக பட்டிமின்றி எந்த விஷயத்தையும் சிந்தித்து முடிவுக்கு வரும் செம்மல் செல்வா.

வடக்கே பருத்தித்துறை முதல் தெற்கே திருக்கோயில் வரையுள்ள எந்தத் தொகுதியில் நின்று போட்டியிட்டாலும் வெல்லும் வல்லாளராக விளங்கியவர் செல்வா.

உலகத் தமிழ் மக்களின் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்று நம்பிக்கை ஒளி வீசியவர் செல்வா.

தமிழர் சிறுபான்மையினரல்லர் இந்த நாட்டின் தேசிய இனத்தவரென்பதை வற்புறுத்தி, வலுவூட்டி நிரந்தரமாக்கி விட்டவர் செல்வா.

செல்வா —
சொற்கை உறுதிக்கு மேரு மலை.
அரசியல் ஞானத்துக்கு ஆழ் கடல்.
கட்சிக்காவலுக்கு கண் இமை.
அரசியல் தீர்க்க தரிசனத்துக்கு மகாத்மாஜி.
மனித உரிமைக்கு ஆபிரகாம் லிங்கன்.

என்றெல்லாம் நாம் புகழ்பாட வாழ்ந்த பெரியவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இன்று இல்லை. புகழ் உடம்பு என்றும் எம்மனக்கண் முன் காட்சிதந்து தமிழர் விடுதலை உணர்வுக்கு வலுவூட்டுமென்பதில் ஐயமில்லை.

செல்வாவின் ஆன்மா சாந்தியடைவதாக.

## படிப்பகங்களின் மகத்துவம்

பண்டத்தரிப்பு, புதன்

தற்கால நிலையில் எமது இளைஞர்கள் அழிவுப் பாதையில் செல்லும் சம்பவங்கள் உலகில் அதிகரித்து வருகின்றன. இளம் வயதிலிருந்தே சமயக் கட்டுப்பாடுகளை அறிந்து தூய வாழ்க்கைவாழ அவர்களை வழிநடத்திச்செல்ல வேண்டியது எமது கடமையாகும். நல்வாசினை, நற்போதனை, என்பவற்றை இளைஞர்கள் மத்தியில் பரப்புவதற்கு இது போன்ற படிப்பகங்கள் அதிக துணைபுரிய முடியும்.

இவ்வாறு கடந்த ஞாயிறன்று சில்லாலை கதிரைமாதா ஆலய குருமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள (வண. யோசவ்வாஸ் இளைஞர் படிப்பகத்தை சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்து சொற்பொழிவாற்றுகையில் அருட்திரு. பிரான்சஸ் குவாஸ் அடிகள் குறிப்பிட்டார்.

வண. யோசவ்வாஸ் இளைஞர் சங்கத்தலைவர் திரு. பி, சி. குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது.

சிறுவர்களுக்கு ஒரு பரந்த எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டியது பெரியார்களாகிய எங்கள் கடமையாகும். வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்ல தொண்டாற்றக் கூடியவர்களாக இளைஞர்களை உருவாக்குவதற்கு இதுபோன்ற படிப்பகங்கள் உதவுமென்பதில் ஐயமில்லை. சங்கச்செயலாளர் திரு. சு. சுகுணராசா நன்றி கூறினார். (இ)

## ஆலாலை ஆதரித்து சிறை சென்ற இளைஞர்கள் மகஜர்!

யாழ்ப்பாணம், வியா

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்று மீண்ட இளைஞர்கள் நல்லூர்த் தொகுதிக்கு திரு. மு. ஆலாலசுந்தரத்தையே நியமிக்கும்படி நியமனக் குழுவினரைக் கோரும் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.

தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசென்ற இளைஞர்களில் பலர் நல்லூரைச் சேர்ந்தவர்கள் என்றும் இத்தகையவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளையிலும் அவர்கள் குடும்பத்தாருடன் நேரடித் தொடர்புகள் மூலம் அக்குடும்பங்களுக்கு ஆறுதலும் ஆலோசனையும் வழங்கி தன்னை முழுமையாக அர்ப்பணித்த திரு. மு. ஆலாலசுந்தரம் கமது பகுதியில் போட்டியிடவேண்டும் என்று பேரவாக் கொண்டுள்ளனர் என்றும் இதுபற்றி நியமனக்குழுவினருக்கு ஒரு மகஜரைக்கையளிப்பதெனறும் இம்மகஜரை நல்லூரில் வைத்து பொதுமக்கள் முன் சமர்ப்பிப்பது என்றும் முடிவெடுத்துள்ளனர் என ஓர் இளைஞர் தெரிவித்துள்ளார்.

## சூருவளிக்கு 6 பேர் பலி

புதுடில்லி, ஏப். 27

மேற்கு வங்காளத்தில் நேற்று வீசிய சூருவளிக் காற்றுக்கு 6 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது 20 கிராமங்களில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. (இ)

# மனச்சாட்சிக்கு மதிப்பு அளித்தவர் எஸ். ஜே. வி.

மறைந்த தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களை நான் முதன் முதலாகக் கண்டது 40 வருடங்களுக்கு முன்பு கொழும்பு விவேகானந்த சபையிலே அன்று, அந்தச் சபை மண்டபத்திலே, "சுவாமிவிவேகானந்தரின் வாழ்க்கை போதனைகள்" என்னும் விஷயம் பற்றி ஓர் உரை நிகழ்த்தினார். வேதாந்த கோட்பாடுகளை பிற சமயங்களோடு ஒற்றுமை வேற்றுமை கண்டு பேசினார். இவர் கிறீஸ்தவர் என்று அப்பொழுது எனக்குத் தெரியாது. பின்பு அறிந்தபொழுது ஆச்சரியப்பட்டேன்.

### மனச்சாட்சிக்கு மதிப்பு

அதேபோல பிற்காலத்தில் நாங்கள் இருவரும் அரசியலில் ஈடுபட்டு ஒன்றாக உழைத்த காலத்தில் சைவசித்தாந்தத்துக்கும் யேசுநாதரின் போதனைகள் அங்கிய விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமை பற்றிப் பேசிக்கொள்வோம். இப்படியான ஆராய்ச்சிகளில் பயின்று இருந்த படியினால்தான் சைவர்கள் பெரும்பான்மையாக உள்ள தமிழ் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரவாளியாக இருந்தார். அரசியல் லாபத்துக்காக வேஷம் போட மாட்டார். ஒருமுறை 1952 தேர்தல் பிரசாரத்தின் போது திரு. நடேசபிள்ளை ஆதரவாளர்களின் பிரசாரத்தை முறியடிப்பதற்காக திரு செல்வநாயகத்தின் ஆதரவாளர்கள் இவரை இணுவில் கந்தசுவாமி கோவிலுக்குக் கூட்டிக் கொண்டுபோய் ஓர் அர்ச்சனை செய்வித்தார்கள். வழிபடுபவர்கள் எல்லோருக்கும் பின்னாலே கையைக்கட்டிக் கொண்டு இவர் நின்றுகொண்டார். குருக்கள் வீபூதி பிரசாதம் கொண்டுவந்து நீட்டினார். இவர் கையெடுத்துக் கும்பிட்டு, மன்னிக்கவும், என்றார். ஆதரவாளர்கள் வாங்கும்படியாக நெருக்கினார்கள், இவர் மறுத்துவிட்டார். பின்பு இந்தச் சம்பவத்தைக் கூறி எனக்குச் சொன்னார் 'எனது மனச்சாட்சியை விற்றுப் வாக்குச் சம்பாதிக்க என்னால் முடியாது' என்றார். அதுதான் செல்வநாயகம்.

தமிழரசுக் கட்சியை வளர்த்து வந்த காலத்திலே, இனத்தை ஒரு இலட்சியப் பாதையிலே வழிநடத்திச் செல்வதானால், அந்த இலட்சியத்திலே உள்ளந்தரங்க சுத்தியோடு உண்மையான நம்பிக்கைவைத்து இருப்பவர்கள் ஒன்று சேர்ந்து உழைத்தால் தான் இலட்சியத்தை அடைய முடியும். அதுதான் உண்மையான ஒற்றுமை என்று அடிக்கடிசொல்லுவார். இந்த அறிவுரைக்கு ஒரு சோதனைக் காலம் வந்தது.

### இலட்சியத்தில் பற்று

ஸ்தாபித்த காலம் தொட்டு தமிழரசுக்கட்சி சொல்லி வந்ததெல்லாம் 1956-ம் ஆண்டிலே சரி என்று நிரூபிக்கப்பட்டு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களத்தை மாத்திரம் அரசகரும மொழியாக்குவேன் என்று சொல்லித் திரிந்தார். அதைப் பார்த்த யூ.என். பி.யும் களனியாவில் மகாநாடு கூடி தனியும் சிங்களம் மாத்திரம் என்று தீர்மானம் நிறைவேற்றினர். யூ. என்.பி.யில் இருந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு. நடேசபிள்ளை முதலிய தலைவர்கள் வெளியேறினர்கள். நாட்டிலே தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு மிகவும் வளர்ந்திருந்தது. திருவாளர்கள் பொன்னம்பலம், நடேசபிள்ளை முதலியோர் சொன்னார்கள், 1956-ம் ஆண்டு தேர்தலிலே எல்லாரும் போட்டிபோட்டு ஒருவரோடு ஒருத்தர் மோதவேண்டுமா? ஒற்றுமையாக பொது அபேட்சகர் பட்டியல் ஒன்றைத் தயாரிப்போம். அந்தப் பட்டியலை ஒரு முதியோர் சபை தெரியட்டும் என்றார்கள். இறுதிக் கட்டத்தில் பேச்சுவார்த்தை திரு நடேசபிள்ளையின் அறையில் நடந்தது. கட்சியின்

**வ. நவரத்தினம்**

*தலைவர்; சுயாட்சிக் கழகம்*

சார்பில் பங்குபற்றுபவர்களை அனுப்பிவிட்டு திரு. செல்வநாயகமும் நானும் அவர் வீட்டில் காத்திருந்தோம். நடுநிசி வரையில் சுகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. எந்த விதமான பொதுப் பட்டியலுக்கும் சம்மதிப்பதில்லை என்பது கட்சியின் பிடிவாதம். நள்ளிரவு தாண்டி 2 மணிக்கு நான் எனது வீட்டுக்குப் போய் விட்டேன். காலை 5-30 மணிக்கு எழுந்து பத்திரிகையைப் பார்த்தால் கட்சியின் தூதுக்குழுவினர் விட்டுக்கொடுத்து விட்ட மாதிரி புதினம் இருந்தது. தான் திரு. செல்வநாயகம் வீட்டுக்கு ஓடினேன். காலை 6-00 மணி அவரும் எழுந்து மேசைக்கு அருகில் திகைத்துப் போய் ஒன்றும்பேசாது இருந்தார். பத்திரிகை முன்னால் விரிக்கப்பட்டிருந்தது அருகில் திருமதி செல்வநாயகம் நின்றார். என்னைக் கண்டதும் விழித்துக் கொண்டிருந்தாரே யன்றிஒன்றும்பேசவில்லை நான் சொன்னேன் "இதை முறியடிக்க வேண்டும் சேர்" என்றேன்அவர்என்னை முறைத்துப் பார்த்து "சிகறட்டை வாயிலே வையுங்கள்" என்றார். எனக்கு ஏன் என்று விளங்கவில்லை. அவர் மீண்டும் சொன்னார். நான் அப்படியே செய்தேன். அவர் எழுந்துநின்று "கொடுங்கள் கையை" என்று எனது கையைப் பிடித்து சத்தியம் செய்தார். "இரண்டு பேரும் சேர்ந்து இதை முறியடிப்போம்" என்றார். அவ்வாறே செய்துவிட்டு, 1956-ம்ஆண்டு கட்சி தனியாகவே போட்டி போட்டு அமோகமான வெற்றியும் ஈட்டியது- இலட்சியத்திலே விடாப்பிடியான பற்றுள்ளவர்களைக் கொண்டே தமிழரசு இயக்கத்தைக் கட்டி எழுப்பினர்.

### பாமர மக்களுடன் பழகுவார்

அவரிடம் இருந்த இன்னுமொரு விசேஷ குணம் சாதாரணமக்களோடு அன்னியோன்யமாகப் பழகக்கூடிய மனப்பாங்கு. அரசமாளிகை வாழ்க்கையையும வாழ்வார். பாமர மக்களின் குடிசையிலே தரையிலும் படுத்துறங்குவார். ஒருமுறை 1947-ம் ஆண்டுத் தேர்தலிலே திருவாளர் குலசிங்கத்துக்காக (அட்வகேட்) அனலைதீவில் பிரசாரம்செய்துவிட்டு இரவு கடற்கரைக்கு வந்திருக்கிறார்கள் வள்ளம் பிடித்து ஊர்காவற்றுறைக்குப் போவதற்காக. வள்ளம் ஒன்றும் கிடைக்கவில்லை. எல்லாரையும் போல் திரு. செல்வநாயகமும் கடற்கரையிலே சால்வையை விரித்து கையை தலையணையாக வைத்து படுத்துறங்கிவிட்டார். இதில்விசேஷம்என்னவென்றுசிலர் சிந்திக்கலாம். கொழும்பிலே மிகப் பிரபல்யம் வாய்ந்த அப்பீல் கோட்டு லோயர் அந்தக் காலத்திலே எப்படிப்பட்ட வாழ்க்கையை அனுபவிக்கிறவர் என்று சிந்திக்கக் கூடியவர்களுக்கு விளங்கும். தான் கொண்ட கொள்கையிலே- கட்சியிலே இருந்த பற்றும் இயற்கையாக உள்ள குணாதிசயமும்தான் இப்படியாக பாமர மக்களின் நிலைக்கு இறங்கி வாழத் தூண்டும்.

திரு. செல்வநாயத்தை நினைக்கும் பொழுது ஆயிரக்கணக்கான சம்பவங்கள் மனத்திரையிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. பிற்காலத்தில் கருத்து வேறுபாடுகள் எங்களைப் பிரித்து வைத்திருந்த போதிலும் அவர் மீது வைத்திருந்த மதிப்பை நான் இழக்கவில்லை. கண்ணியம் மிக்க பெரிய மனிதர் ஒருவரை- உணர்ச்சியுள்ள தலைவர் ஒருவரைநாம் இழந்துவிட்டோம்.

(கு)

---

# "தமிழ் ஈழம் அமைப்பதே நாம் 'செலுத்தும் அஞ்சலி

## மூதறிஞர் மறைவுகுறித்து வி. பி.



யாழ்ப்பாணம, வியா.

'தமிழ் ஈழம் அமைப்பதே மறைந்ததலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் புனித வாழ்விற்கு நாம்செலுத்தும் அஞ்சலி ஆகும்'.

இவ்வாறு மூதறிஞர்செல்வாவின் மறைவு குறித்து கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. வ. பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'திரு. செல்வநாயகத்தின் அரசியல் வாழ்வின் ஆரம்பத்தில் நான் அரசியலில் அடி எடுத்து வைத்தேன். எனக்கென ஓர் அரசியல் லட்சியத்தை ஏற்று அதனபடி வாழ எத்தனித்த போது பெரியாருடன் பல தடவைகளில் போட்டியிடும் நிலைமை எனக்கேற்பட்டது. அவரை எதிர்த்தபோதெல்லாம் அவர்மீது எனக்கிருந்த மதிப்புக் குறைவதற்குப் பதிலாக உயர்ந்தே வந்தது. பெரியார் விட்டுச்சென்ற நற்பணியைத் தொடரும் முகமாகத் தமிழ்மக்கள் தம்மைத் தாமே ஆளவும் எமது பாரம்பரிய தாயகங்களில் சுயாட்சிப் பிரதேசமாக சுயநிர்ணய உரிமை பெற்ற தமிழ்ஈழத்தை அமைக்கும் பணியைத் தொடருவோருடன் சேர்ந்துநின்று எனது கட்... ஆம் எமது பங்கைச் செய்... கம்யூனிஸ்டுகளாகிய நாம் சாதிக்கிறோம். இதுவே மறைந்த பேரறிஞரின் புனித வாழ்வுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்'. (கா-அ)

---

## "உண்மைத் தமிழராய் வாழ்வதே கைமாறு"

தமிழீழத்தின் தனியொரு சிற்பியும், தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவனும், தமிழரசுத் தந்தையும், ஈழத்து காந்தியுமான மாமேதை எஸ்.ஜே. வி.செல்வநாயகத்தின் மறைவு தமிழ் உலகிற்கும்' குறிப்பாக ஈழத் தமிழ் மக்களுக்கும், தமிழர் விடுதலை முன்னணிக்கும் என்றுமே எதனாலுமே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்

அன்னாரின் பிரிவு எமக்குத் தந்த பேரதிர்ச்சியால் நாம் நடுக்காட்டில் நள்ளிரவில் தாயைப் பிரிந்து கதறும் சேய் போல் தவிக்கின்றோம்.

தலைவரின் அடியொற்றி அவர் இலட்சியவழியில் உண்மைத் தமிழ் மக்களாய் நாம் வாழ்வதை நாம்தலைவருக்குச் செய்யும் கைமாறாகும்.

இவ்வாறு அனைத்திலங்கைச் சைவமாமன்றம் சார்பில்அதன் பொறுப்பாளர் திரு.பிர.பாலகிருஷ்ணன் விடுத்துள்ளசெய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

---

## ரசிக ரஞ்சன சபா நன்றித் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 26-வது ஆண்டு இசைவிழாவை யொட்டி சபைத் தலைவர் ஆர். சி. மன்மதராயன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரசபையினர் இசைப்பரிசோதனையை திரும்பவும் வைக்க எடுத்த நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்தும், அடுத்துவரும் இசைப்பரிசோதனையை சிறப்பான முறையில் நடாத்தும்படி கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (கா-அ)

......

## சீரற்றபஸ்சேவை

பண்டத்தரிப்பு, புதன்

யாழ்ப்பாணம் சில்லாலை பஸ் சேவை சமீப நாட்களாக மிகவும் சீர்கேடு அடைந்து வருவதாக பிரயாணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

ஒரேஒரு பஸ் வண்டி மட்டுமே இச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் இந்த பஸ்வண்டி பழுது பட்டால் பதிலாக வேறு பஸ்வண்டி விடப்படுவதில்லை என்றும் புகார் தெரிவிக்கின்றனர். இதனால் சில்லாலையிலிருந்து தினமும் பிரயாணம் செய்யும் அரசாங்க ஊழியர்களும், பாடசாலை மாணவர்களும் மிகுந்த சிரமம் அடைகின்றனர். [இ]

---

## சங்கிலி திருட்டு இளம்பெண் கைது

யாழ்ப்பாணம், வியாழன்

தங்கச் சங்கிலி திருட்டுச் சம்பவம் பற்றி ஆனைக்கோட்டைப் பொலிசில் செய்யப்பட்ட புகாரை அடுத்து இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது: ஆனைக்கோட்டைப் பொலிசில் இம்மாதம் 15-ம்தேதி அன்று செய்யப்பட்ட தங்கச் சங்கிலி திருட்டுச் புகார் சம்பந்தமாக விசாரணை நடத்திய பொலிஸ் சார்ஜன்ட் இராசையாவும், பொலிஸ் கான்ஸ்டபிள் செல்லத்துரையும் எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கையால் யாழ்ப்பாணத்தில் உள்ள நகைக்கடையொன்றில் இருந்து சங்கிலியைக் கைப்பற்றியதுடன் இது சம்பந்தமாக கிருஷ்ணீ என்ற

[7-ம் பக்கம் பார்க்க]

---

# "தலைமைத் தீர்மானத்தை ஏற்க வேண்டும்" —ஜெயக்கொடி

நெல்லியடி, புதன்

தமிழரசுக் கட்சியிலும், கூட்டணியிலும் நீண்ட காலம் சேவையாற்றி வந்துள்ளேன். அதனால் கூட்டணியின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து, தலைமைப்பீடத்தின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.'

உடுப்பிட்டி எம்.பி. திரு. க.ஜெயக்கொடி தம்மைச் சந்தித்த ஆதரவாளர் மத்தியில் மேற்கண்டவாறு கூறினார்.

இளைஞர்கள் உட்படப் பலர் திரு.ஜெயக்கொடியின் இல்லத்திற்குச்சென்று நிலைமையை ஆராய்ந்து வருகிறார்கள்.

சிறுபான்மைத்தமிழரில் ஒரு பிரிவினரும் அவரைச்சந்தித்து தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

உடுப்பிட்டித் தொகுதிக்கு கூட்டணி நியமித்துள்ள திரு. இராசலிங்கம், இன்னும்தமது சம்மதத்தைக் கூட்டணிக்குத் தெரிவிக்கவில்லை.

உடுப்பிட்டி எம்.பி. திரு.க. ஜெயக்கொடியையும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்தையும் சந்தித்துப்பேசி அவர்களின் ஆதரவைப் பெற்ற பின்னரே, தமது சம்மதத்தைத் தெரிவிக்கவிருப்பதாக திரு. இ. ராஜலிங்கம் கூறினார். இச் சந்திப்பு இம்மாதம் 28ம் தேதி நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம், உடுப்பிட்டித் தொகுதியில், சட்டத்தரணி எம் மோதிலால்நேரு, சட்டத்தரணி கே. பிள்ளையினர், திரு. பொன் குமாரசாமி ஆகியோர் போட்டியிட விருக்கிறார்கள். தமிழர் சுயாட்சிக்கழகமும், சிறுபான்மைத்தமிழர்ஒருவரை நிறுத்த முயற்சித்து வருகிறது. கரவெட்டியைச் சேர்ந்த திரு, மகாதேவா என்பவரும் போட்டியிடவிருக்கிறார் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இராசலிங்கத்தை எதிர்த்துப் போட்டியிடுபவர்களைப் போட்டியிலிருந்து வாபஸ் பெறச்செய்வதற்காக தமிழர்கூட்டணிப்பிரமுகர்கள் சிலர் கடந்த இரண்டு தினங்களாகமுயற்சித்துவருகின்றனர்.

கடந்த இரு மாதங்களாகச் சுகவீனமுற்று கொழும்பிலிருந்த திரு. எம். சிவசிதம்பரம் இம்மாதம் 28ந் திகதி உடுப்பிட்டித்தொகுதிக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர்கள் அவரைச் சந்தித்து தங்கள் கருத்தைத் தெரிவிக்கவிருக்கிறார்கள்.

---

## யாழ். ரசிக ரஞ்சனசபா துக்கம்

யாழ்ப்பாணம், வியா.

மூதறிஞரின் மறைவையொட்டி இம்மாதம் 29ந்தேதி நடைபெறவிருந்த யாழ். ரசிக ரஞ்சனசபா இசைவிழா, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. தந்தையின் மறைவு குறித்துச் சபைச்செயலாளர் திரு. தம்பையா விடுத்துள்ள அனுதாபச்செய்தி வருமாறு;

'தமிழ்ஈழம் காண்பதற்குத் தன்வாழ்வையே அர்ப்பணித்து உழைத்த தமிழ்பேசும் மக்களின் தன்னிகரில்லாத தலைவர் - மூதறிஞர் - ஈழத்துக் காந்தி - தந்தை செல்வாவின் மறைவு தமிழ்பேசும் நெஞ்செல்லாம் அதிர்ச்சியை விதைத்துவிட்டது. தமிழினத்தின் சாபக்கேடு தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக இழந்து வருகிறோம். திக்கற்ற எமது இனத்தைக் காப்பாற்றக் கடவுள் வேண்டி தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம். (அ)

## தமிழர்பிரச்னை படிப்படியாக தீரும் என்கிறார் அமைச்சர்

அனுராதபுரம், புதன்

"இதுவரை தீர்க்கப்படாதிருக்கும் தமிழ்மக்களின் பிரச்னைக்கு அரசாங்கத்தால் படிப்படியாகத் தீர்வு காணப்படும்" என்று போக்குவரத்து விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. பி. இரத்நாயகா அனுராதபுரம் தமிழ் சம்மேளன உறுப்பினர்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் தமது உரையில் "தமிழ் மக்களின் பல பிரச்னைகளைத் தீர்த்து வைத்தது இந்த அரசாங்கமே. இந்த அரசாங்கம் போல் வேறெந்த அரசாங்கமும் மக்களுக்குப் பணியாற்றவில்லை" என்றார். (உ)

பதவிஆசையால்

## மக்களுக்குத் தவருன வழியை காட்டுகிறது யு. என். பி

### பதிலமைச்சர்

தங்கொட்டுவா, புதன்

'பதவி ஆசைபிடித்த ஐக்கிய தேசியக் கட்சியினர் மக்களுக்குப் பிழையான வழிகளைக் காட்டி, அடுத்த தேர்தலில் ஆட்சிக்குவர முயற்சிக்கின்றனர்' என்று வென்னப்புவையில் நடந்த சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் கடற்றொழில் பதில் அமைச்சர் திரு அகஸ்டஸ் பொன்சேகா கூறினார்.

நாட்டில் நடந்துள்ள அபிவிருத்தி வேலைகளைப் பார்க்கும்போது மக்கள் மீண்டும் சுதந்திரக் கட்சியையே ஆட்சியில் அமர்த்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை என்று, திரு. பொன்சேகா கூறினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த நாட்டின் உணவுப் பிரச்னையைத் தீர்த்து வைப்பது பதவிக்கு வரும் எந்த அரசினதும் கடமையாகும். இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்குச் சுதந்திரக்கட்சி அரசாங்கம், மகாவலியைத் திசை திருப்பும் திட்டத்தை நடாத்தி வருகிறது.

மற்றும் அரசுகளினால்செய்ய முடியாத அளவில் நாட்டின் கடற்றொழிலாளர் பிரச்னைகள் சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது. ஒரளவுக்கு வேலையில்லாப் பிரச்னையும் இந்த அரசினால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்குப் பெருமளவில் நியமனம்வழங்கப்பட்டுள்ளது. (க-அ)

# 'ஆட்சிமன்றம் செல்வது விடுதலைப் பாதையாகாது"

## புங்குடுதீவுக் கருத்தரங்கில் கருத்து

வண்ணார்பண்ணை, புதன்

தமிழ்மக்கள் இன்று எதை விரும்புகிறார்களோ அதைச் செய்வதற்கு இன்றுள்ள தலைமையில் இடமில்லை. புதிய தலைமை தமிழ்மக்களை வழிநடத்தவேண்டும். மக்களின் அடிப்படைப் பிரச்னைகளை அறிந்த - உணர்ந்த தலைமையையே இன்று தமிழ் இளைஞர்கள் விரும்புகின்றனர்'.

இவ்வாறு சனிக்கிழமைமாலை புங்குடுதீவில் நடந்த 'தமிழர்களின் பிரச்னைகள்' என்ற கருத்தரங்கில் உரையாற்றிய சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா குறிப்பிட்டார்.

புங்குடுதீவு கிழக்கு மத்தி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் புலவர் ஈழத்துச்சிவானந்தன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. ஸ்ரீகாந்தா மேலும் பேசுகையில்: தமிழினம்சுய நிர்ணயஉரிமை பெறுவதற்குத் தகுதியான தலைமைவேண்டும். இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தட்டிஎழுப்பி சுலோகங்களை எழுதி ஆட்சிமன்றம் போவதை மட்டும் நாம் தமிழினத்தின் விடுதலைப் பாதையாகக் கருத முடியாது. எமது இன்றைய நிலை நாம் தனிநாடு பெறக்கூடிய தலைமையின்கீழ் இருக்கிறோமா என்பதையே தெளிவுபடுத்துகிறது. சிலரைத் தலைவர்களாக்க இளைஞர்கள் பயன்படுத்தப்படுகிறார்களே தவிர இளைஞர்களின் தலைமைவேண்டும் என்பதை இன்றும் தலைவர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

தமிழ்மக்கள் மத்தியில் சுயநலமும், பிற்போக்கும் வலுவடைந்து வருவதைக் காண முடிகிறது. இது அரசியல்தலைமையின் தவருகும். கிராமம் தோறும் சமூகசேவை சமதர்மம் வளர எமது சமுதாயம் முயன்றபோதும் இந்த இடங்களில் அரசியல்வாதிகளின் தலையீடுகளால் இளைஞர்கள் கூறுபோடப்பட்டு, ஒற்றுமை குலையும்நிலை ஏற்படுகிறது.

### சமநிலை இல்லை

இரண்டரை லட்சம் சிறுபான்மைத் தமிழர்கள் இன்னும் சமநிலைக்குக் கொண்டுவரப்படவில்லை. இப்படியான சாபக்கேடுகளை நீக்கி சகல தமிழ்மக்கள் மத்தியிலும் சுயாட்சிபெறும் துடிப்பை ஒற்றுமையாக ஏற்படுத்தவேண்டியது முக்கியமான தலைவர்களது கடமையாகும். செயலளவில் நடைமுறையில் நடந்து காட்டுவதுதான் தலைவர்களது கடமை. ஒரு சமூகத்தின் வாக்கைப் பெறுவதற்காகத் தொகுதிஒன்றைக் கொடுத்துவிட்டால்மட்டும் பிரச்னை தீராது. மக்கள்மத்தியில் மனமாற்றத்தைத் தீவிரமாக ஏற்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் பரஸ்பரம், ஒற்றுமை, சமதர்மம், பொருளாதார சகவாழ்வு, தமிழ் ஈழத்தில் பற்று ஏற்பட்டால்தான் தனி ஆட்சியிலும் அந்தநிலை உருவாகலாம். இல்லையேல் நாம் தனியாட்சிபெறத் தகுதியற்றவர்களாகிவிடுவோம்.

கடந்த 30 வருட காலமாக சமஷ்டிக் கோரிக்கையின்மீது தமிழ்மக்கள்வழிநடத்தப்பட்டு பல தேர்தல்களைக் கண்டார்கள். ஆனால் சுயாட்சிக் கோரிக்கையைவைத்து இன்னும் முப்பது ஆண்டுகள் காலம் கழித்தால் தமிழினம் இன்னும் ஐந்து ஆண்டுகளில் தலைநிமிர்ந்து உரிமைபேசமுடியாத இனமாக மாறிவிடும்.

### குடியரசுக்குப் பின்னர்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச்சேர்ந்த மாதகல் வ. கந்தசாமி பேசுகையில் 1948-ம் ஆண்டு இலங்கை சுதந்திரமுடைய நாடாகக் கணிக்கப்பட்டாலும் பொருளாதாரரீதியிலும் மக்கள் ஆட்சியிலும் குடியரசின்பின்னரே ஓரளவு சுதந்திரத்தை இலங்கை மக்கள் காணமுடிகிறது. இருந்தாலும் 1948-க்குப் பின்னர் நாம் வெள்ளைத்துரைமாரை எமதுநாட்டிலிருந்து அகற்றினேமே தவிர எமது நாட்டில் கறுப்புத்துரைமார் வளர்ந்துகொண்டுதான் இருந்தனர். இதனால் இந்தநாட்டுப் பணம் மக்கள் மத்தியில் நடமாடவில்லை. இன்றுதான் சகலமக்களும் சுதந்திரத்தை அனுபவிக்கும்நிலை ஏற்பட்டது.

உலகிலுள்ள பலநாடுகளில் பலவிதமான தேசிய இனங்கள் இருக்கின்றன. எல்லாநாடுகளிலும் இனப்பிரச்னை மொழிப்பிரச்னை இருந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் அந்தநாடுகள் தேசியரீதியாக இப்பிரச்னைகளைத் தீர்த்து சகல மக்களும் திருப்தியாகத் தமது மொழியைக் கலாச்சாரத்தைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளன. காலத்துக்குக்காலம் அப்பிரச்னைகள் ஆராயப்பட்டு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இது போலவே இன்று எமது நாட்டிலும் தமிழ்மக்களின் பிரச்னைகளுமே தேசிய ரீதியில் காலத்துக்குக்காலம் ஆராயப்பட்டு தமிழ்மக்களுக்குத்தேவையான உரிமைகள் வழங்கப்படுகின்றன. நாம் அணுகும் முறையில்தான் நாம் எமது பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்கக்கூடிய வழிவகை ஏற்பட இடமுண்டு. தமிழினம் தனது சகல வலிமைகளையும் தேசியரீதியில் வலுப்படுத்திக் கொண்டுதான் தன்னைத்தான் ஆளும் அந்தஸ்திற்கு உயர்த்த முடியும். இதற்கு ஆதரவு தரக்கூடிய தேசியக்கட்சி எது என்பதை தமிழ்மக்கள் கடந்த காலச் சரித்திரங்களை வைத்துச் சிந்திக்கவேண்டும். தமிழினம் தன்னைப் பலப்படுத்தாமல் தான் பலமுடன் செய்யும் வேலையை மேற்கொள்ளக் கூடாது. வங்காளதேசம் தனி நாட்டுக்காகப் போராடியது. ஆனால் இன்று அங்கு ஏற்படும் நிலை எமக்கு ஒருபாடமாக இருக்கவேண்டும். இதேபோல் பல்வேறு பிரச்னைகள் எமது மத்தியிலும் இருக்கத்தான் செய்யும். இவையெல்லாம் தீர்க்கப்படவேண்டும்.

'ஈழநாடு' பத்திரிகையில் இப்பொழுது உருவாகியிருக்கும் விவாதமேடை தமிழ்மக்களுக்கு ஒருநல்ல பாராளுமன்றமாகவும், பல்கலைக்கழகமாகவும் அமைகின்றது. இதே போலத்தான் இப்படியான கருத்தரங்குகளும் மக்களுக்குப் பயன்படவேண்டும். ஒரு கருத்தை ஏற்க மறுப்பவர்கள் தமது கருத்தைமட்டும் சரியாக ஏற்கவேண்டும் என்று கூறுபவர்கள் மக்களை எந்தவிதத்திலும் வழிநடத்தத் தகுதியற்றவர்கள் என்றுதான் கூறலாம்.

சிங்களம் மட்டும் என்ற சட்டம் பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்டதல்ல. சிங்களமக்களின் கருத்தையேஅவர் செயல்படுத்தினார். 1944-ல் ஆங்கிலம்தான் எமது நாட்டில் இயங்கியது. 1946-ல் சுயமொழி ஆர்வம் சிங்களமக்கள் மத்தியில் எழுந்தது. இதனால் சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா சுயமொழிக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார். இதன்பின் 1949ல் ஐக்கியதேசியக்கட்சி களனி மகாநாட்டில் சிங்களம்மட்டும் தீர்மானத்தைக் கொண்டுவந்தது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் தாமதமேற்பட்டது. 1956-ல் அமரர் பண்டாரநாயக்கா சிங்களமக்களின் சுயமொழிஆர்வத்தைச் செயல்படுத்த முனைந்தார்.

1944-ல் சிங்களமக்கள் மத்தியில் சுயமொழி உணர்வு ஒட்டம் வலுத்தபோது, தமிழ்மக்கள் மத்தியில் அந்த உணர்வு வலுவடைந்திருந்தால் அந்த மக்களுடன் சேர்ந்து தமிழ்மொழியும் இன்று சமநிலையை அடைந்திருக்கும். அன்றைய சூழ்நிலையில் இவைசாத்தியப்

(2-ம் பக்கம் பார்க்க)




அரசியல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுஇவ்வாறு இருக்க, ராஜ்ய சபாவில் மேலும் இரு காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்று ஜனதா கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

காங்கிரஸ் கட்சி தேர்தலில் படுதோல்வியடைந்த பின்னரும்கூடக் காங்கிரஸ் தலைமைப் பீடம் தன் போக்கை மாற்றிக் கொள்ளாதது கண்டிக்கத்தக்கது என்று இவர்கள் கூறியுள்ளனர். (உ)

# தந்தைக்கு அஞ்சலி—

( 1ம் பக்கத்தொடர்ச்சி )

இன்று யாழ்ப்பாணம் வருகிறது. தந்தை செல்வாவின் மறைவுக்கு நேரில் அஞ்சலி செலுத்தும் பொருட்டு தென்னிலங்கையிலிருந்தும் மற்றும் நாட்டின் நாலாபகுதிகளிலிருந்தும் பெருந்திரளாக மக்கள் யாழ் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் 16-ம் வார்டு வாசலில் சைக்கிளிலிருந்து இறங்கியதும் "ஐயா" என்று கதறியபடியே மயங்கி விழுந்தார்.

நேற்றுமுன்தினரவு தந்தையின் உடல் நிலை மோசமடைந்ததென்ற தகவல் கிடைத்ததும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களும் தொண்டர்களும் தமிழ் இளைஞர்பேரவையைச் சேர்ந்தவர்களும் பதினாறும்வார்டு முன்பாகத் திரண்டனர்.

தந்தை செல்வாவின் பூதவுடல் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆஸ்பத்திரியிலிருந்து ஊர்வலமாக பிரதான வீதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமை அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லட்டது. அங்கு தொண்டர்கள் அஞ்சலி செலுத்தியபின் மாலை 5 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டது.

"விடுதலைகாண தமிழினம் துடித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், திரு.செல்வநாயகம் அவர்களின் மறைவு எம்மை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது."

தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித்தலைவர் திரு.குமார் பொன்னம்பலம் வெளியிட்ட இரங்கல்செய்தியில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும்கூறப் பட்டிருப்பதாவது: தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான திரு. செல்வநாயகம் அவர்கள் மறைவு செய்திகேட்டு பேரதிர்ச்சியடைந்தேன்.

தமிழினம் தம் இணையற்ற தலைவர்களை குறுகிய காலத்தில் அடுத்தடுத்து இழந்துள்ளது ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

திரு. செல்வநாயகம் அவர்கள் எமது சகாப்தத்தின் மகோன்னத மனிதர்களில் ஒருவராகும்.

"இவ்வேளை இவர் மறைவு எம்மை துயரத்தில் ஆழ்த்துகிறது. ஒரு புகழ்பெற்ற மேதைக்கு நன்றியோடு அஞ்சலியை என் சார்பிலும், தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியின் சார்பிலும், என்குடும்பத்தார் சார்பிலும் செலுத்துகின்றேன்". (சு)

## தமிழினத்தின்—

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்நாளை நாட்டுக்கும், மக்களுக்கும் இனத்துக்கும் தமக்கு பல வழிகளில் பயன்படக்கூடிய வழிகளில் பாவித்து வாழ்ந்தவர்.

சிங்கள மக்கள் மத்தியில் திரு. செல்வநாயகத்துக்கு அரிய பெரிய மதிப்பும் அன்பும் இருந்தது யாவரும் அறிந்ததே. அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இந்த மதிப்பின் விளைவாகவே திரு. செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்தார்.

இன்றைய பிரதமர் திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களும் திரு. செல்வநாயகத்துடன் பேச்சுக்கள் நடத்தினார். பேச்சுக்கள் நடைபெறும் வேளையில் அது அன்யோன்யமாக பயன் உள்ள வகையில் வளரும் சமயத்தில் அவர் மறைந்தது துரதிர்ஷ்டமே.

கடந்த கால் நூற்றுண்டு கால வரலாற்றை எழுத முற்படும்போது, ஆராயும்போது திரு. செல்வநாயகத்தின் பங்கு இமயம்போன்று வானளாவி நிற்கும். தம் வாழ் நாளை பூரணத்துவமாக கழித்து விட்ட பெரியார், ஞானி, செல்வநாயகம் இறைவனடி எய்தி நித்தியம் பெறவேண்டுமென பிரார்த்திப்போம்.

## ஒலிபெருக்கியில் அறிவிப்பு

நேற்று அதிகாலை நான்கு மணிக்கு தந்தை செல்வாவின் மரணத்தின் அனுதாபச்செய்திகள் ஒலிபெருக்கி பொருத்தப் பட்ட வான்களில் யாழ். நகரின் சகல இடங்களிலும் அறிவிக்கப்பட்டது. அறிவித்தலை அறிந்த இளைஞர்கள் வைத்தியசாலையை முற்றுகையிட்டனர். யாழ்.நகரெங்கும்மரணச் செய்தி அறிவிக்கும் முகமாகவும், அனுதாபத்திற்காகவும் கறுப்புக்கொடிகள்பறக்கவிடப் பட்டன. வீதிகளிலும் மரணம் பற்றி எழுதப்பட்டுள்ளது.

## கருணாநிதிக்கு ...

(1ம் பக்க தொடர்ச்சி)

செல்வாவின் மூத்தமகள் திருமதி வில்சன் இன்று புறப்படுவதாகவும் அநேகமாக வெள்ளியன்று கொழும்பு வந்து சேரலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவிலுள்ள மகன்கள் டாக்டர் ஏ, சி. மனோகரனும், ஜே. சி. ரவீந்திரனும் தந்தை செல்வாவின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனராம்.

### விசேஷ பஸ்சேவை

தந்தை செல்வாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு ஆர்வம் கொண்டு யாழ். நகர் நோக்கி வரும் மக்களுக்காக விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்படுகிறது. இ. போ. ச தலைவர் திரு. ஜே. கி. ரி. கொத்தலாவலையுடன் தொடர்பு கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, மன்னர் போன்ற இடங்களிலிருந்து இந்த விசேஷ பஸ்சேவைநடைபெறும் என்று தெரிகின்றது.

இதே சமயம் தந்தை செல்வாவின் இறுதி யாத்திரிகைக்கான ஒழுங்குகள் பற்றிய விபரங்களை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன விசாரித்தறிந்ததாகத் தெரிகிறது. (ம)

## வானொலியும் அஞ்சலி

கொழும்பு, புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மூதறிஞர் செல்வாவின் மறைவையொட்டி இலங்கை வானொலியில் இன்று பக்திப்பாடல்கள் ஒலிபரப்பப் பட்டன.

அமரரின் மறைவையொட்டி வழமையான நிகழ்ச்சிகள் ரத்து ச் செய் ய ப் பட்டுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் அறிவித்தது. (சு)

## முதலியார் அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

"தந்தை செல்வாவின் இழப்பு தமிழினத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு. நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று அன்னாருக்கு இறுதி அஞ்சலிசெலுத்துவோம்" என்று தமிழ் ஈழ விடுதலைக்கூட்டணித் தலைவர் மறைவு குறித்து இலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்கத் தலைவர் சி. பொ. வ. பா. க. முதலியார் விடுத்த இரங்கற் செய்தியில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தமது இரங்கற்செய்தியில்

12 ஆயிரம் சுருட்டுத்தொழிலாளர் சார்பிலும் சுருட்டு முதலாளிமார் சார்பிலும். புகையிலை உற்பத்தியாளர் சார்பிலும், தமிழ் மக்கள் சார்பிலும் அனுதாபம் தெரிவிப்பதாக அச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (கா-அ)

## இளைஞர் பேரவை கண்ணீர் வடிக்கிறது

தந்தையின் மறைவை அறிந்த யாழ். தொகுதித் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் கண்ணீர் மல்கப் பின்வரும் இரங்கற் செய்தியை விடுத்தனர்:

"எங்கள் உயிர்த்துடிப்பாய் உள்ளத்துப் புத்துணர்வாய்த் திகழ்ந்த எங்கள் தங்கத் தலைவரை இழந்துநாம் ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். உங்கள் உயிர் எம்மை விட்டுப் பிரிவதைக் கண்ணால் பார்த்திருக்கும் பாவியானோம்.உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்து தந்தைகண்ட தமிழ் ஈழக் கனவை நனவாக்க தந்தையின் பூதவுடல் மேல் ஆணையிட்டு உறுதி செய்கின்றோம்." (கி—அ)

## தமிழ் இனத்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை, வாழ்க்கையில் நம்பிக்கையையும் ஊட்டி வந்தார். தமிழர் தம் தனித்துவத்தைஇழக்கக்கூடாது என்று இனத்துக்கு வழிகாட்டிவந்த தலைவர்கள் வரிசையில் அழியாப்புகழ் பெற்றவராகிவிட்டார். சில காலமாகச் செயலிழந்திருந்த நேரத்தில்கூட அவர் நம் மத்தியில் இருக்கிறார் என்ற உணர்ச்சி இனத்துக்கு ஒரு வகையான தெம்பைச் கொடுத்துவந்தது. திரு. செல்வநாயகம் ஒருவருக்குத் தான்தென்னிலங்கை உண்மையாகப் பயந்து இருந்தது. அவரின் மறைவு இனத்தின் கவசத்தைப் பறித்ததுபோல் ஆகிவிட்டது.

சோகத்தில் ஆழ்ந்திருக்கும் தமிழ் மக்களுக்கு, தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நெருங்கிய நட்புறவோடு பழகிய அவர் துணைவியார் திருமதி செல்வநாயகத்துக்கும் அவர் குடும்பத்தினருக்கும் எனது சொந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## சங்கிலி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

22வயது இளம் பெண் ஒருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். குற்றத்தை ஒப்புக் கொண்ட இவ்விளம் பெண்ணை அடுத்த மாதம் 10-ம்தேதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.(கா)


ராஜா (யாழ். நகர்)
எஸ். எஸ்.ஆர். - ரங்கராவ் விஜயகுமாரி
[தினசரி 4 காட்சிகள்]
குமுதம்

12 வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA)
ஜனத்திரள் நிறைந்த 2-வது வாரம்
Daily at 4-45,7-00&9-30p.m. only
அதிசயம்! ஆனால் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறார்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறார்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.
For All Good Children From 8 to 80!
"CIRCUS"
(A Full Length Circus Film) (Color)

வெலிங்டன் (யாழ். நகர்)
முத்துராமன் சுஜாதா நடிக்க
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ (யாழ். நகர்) போன்: 769
விஜயகுமார் —லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

NOW SHOWING
(Jaffna)
Dean Jones
MR INVISIBLE
LAUGH — LAUGH — LAUGH
Form 29-4-77
Holiday on the Buses

மகத்தான 55-வது நாள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்) ஜெயலலிதா சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - தேவிகா நடித்த
நீலவானம்
29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தான படைப்பு
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.-சாவித்திரி
வேட்டைக்காரன்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
என் கடமை

வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனிஞாயிறு2-30
சிவாஜி-பானுமதி
அம்பிகாபதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
சௌகார் ஜானகி, சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்
மனிதனும்தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மென் கலர்) டைரக்ஷன்: பி. மாதவன் பி. ஏ.

ஈழநாடு
THE EELANADU

# "கட்டிக்காத்த ஒற்றுமையை சிதறவிட மாட்டோம்"

## யோகேசின் இரங்கற் செய்தி

யாழ்ப்பாணம், புதன்

"தமிழ் ஈழத்தின் தேசபிதாவையிழந்துவிட்டோம். தமிழ் இனம் - மீட்பனை - இரட்சகனை இழந்து தவித்து நிற்கிறது. மேய்ப்பனை இழந்து நிற்கும் ஆட்டுக் குட்டிகளைப் போன்று நிலைகுலைந்து நிற்கிருர்கள் தமிழ்த் தலைவர்கள் தாயை இழந்தகுழந்தைகளைப்போன்று தமிழினம் கதறுகிறது."

யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்பாளர் திரு. வி.யோகேஸ்வரன் வெளியிட்ட இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

'ஆண்டவா எமக்கு ஒரு இரட்சகனைத் தந்தாய் ஒரு திசையறி கருவியாய், கலங்கரைவிளக்கமாய் அவர் காட்டி நின்ற தமிழ் ஈழத்தை நோக்கி தமிழ் மக்கள் வீறுநடை போட்ட நேரத்தில் இறைவா ஏன் அந்த கலங்கரை விளக்கத்தை அகற்றினுய்.

'அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் போன்று மூலைக்கு ஒருவராகச் சிதறிக்கிடந்த தமிழ் மக்களை சாதி-மத பிரதேச வேறுபாடுகள் கடந்த ஒற்றுமைக்கு ஆட்படுத்திய மூதறிஞர் செல்வா நம்மை விட்டுப்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து நீர்காட்டிய வழியிலே, தமிழ்ஈழம் காண நாம் விரைவோம். நீர் கட்டிக்காத்த தமிழ் ஒற்றுமையை சிதறிப் போக நாம் விடமாட்டோம். சுதந்திர தமிழ் ஈழத்தை எம் வாழ்நாளில் மீண்டே திருவோம்என்றுசூளுரைத்துஉமது தாழ் பணிகின்றேம்.'

# "தமிழினத்தின் பிதாமகராக விளங்கினுர்"

## அமைச்சர் குமாரசூரியர் அஞ்சலி

கொழும்பு, புதன்



'தமிழ் இனத்தின் பிதா மகராக அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் விளங்கினுர். என்று தபால், தந்தி தொடர்புகள், வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

அசில இந்துக்களுக்குரிய பண்பாட்டை மிக உன்னதமாகச் சித்தரிக்கும் சம்பவம் ஒன்று மகா பாரதப் போர் நடக்கவிருந்ததருணத்தில் நடந்தது. இருசேனைகளும் போருக்கு தயாராக நிற்கும் நேரத்தில் தருமராஜன்தேரைவிட்டு இறங்கி நிராயுதபாணியாக, பிதாமகர் என்றும், சகலருக்கும் தந்தை என்றும் போற்றப்பட்ட கங்கா புத்திரரான பிதாமகரின் அருகில் சென்று வலம்வந்து அஞ்சலிசெய்து அவரிடம் போர் செய்வதற்கு அனுமதியும் ஆசியும் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த பீஷ்மரின் நிலைபோன்றதுதான் பெரியார் திரு. செல்வநாயகத்தின் ஸ்தாபனமும் அவரது அணிக்கு புறம்பாக எதிரணியில் இருந்து தமிழ் இனத்துக்குப் பணிபுரிந்த போதிலும் எம்போன்ற பலரும் அவரை குலத்தின் பாட்டனுர், தந்தை பிதாமகர் என ஏற்கத் தவறியதில்லை. இதே போல திரு. செல்வநாயகம் அவர்களும் தமது அரசியல் வாழ்வில் கொள்கைகளையும், விளக்கங்களையும் தமது வாயிலாக தந்தாரே ஒழிய தனிநபருக்கு எதிராக ஏதும் செயலையோ பேச்சையோ பிரயோகிக்கவில்லை' இந்த உயரிய பண்பாடு அவரின்பால் சகலரது அன்பையும் மதிப்பையும் பெற்றுத் தந்தது. நிச்சயமாக கடந்த கால் நூற்ருண்டாக அவர் எம்இனத்தின் பிதாமகரே.

சேர். பொன். இராமநாதனுக்குப்பின் வந்த தலைவர்களில் திரு. செல்வநாயகம் தன் வாழ்வில் இனத்தின் ஒரு கொடியாக சின்னமாக முத்திரையாக விளங்கினுர். இது எல்லாராலும் சிருஷ்டிக்கக்கூடிய, பெறக்கூடிய ஸ்தானமன்று. பிறப்பின் பயனுகவும் உயரிய பண்பாட்டின்விளைவாகவும் பெறும் ஒன்றே. ஆயிரம் பிழைகளை தன் வாழ்வில் கண்ட ஒருவனே மாநிலத்தில் புண்ணியம் பெற்றவனுகக் கருதப்படுகின்றுன். திரு. செல்வநாயகம் ஆயிரம் பிறைகளை இம் மாநிலத்தில் கண்டவர் சகல போகபாக்கியங்களையும் பெற்றவர். இறப்புக்கும், பிறப்புக்கும் இடைப்பட்ட தமது

(7-ம் பக்கம் பார்க்க)

## கம்யூனிஸ்ட் மேதினம் ரத்து

யாழ்ப்பாணம், வியா.

மூதறிஞர் செல்வாவின் மறைவையொட்டி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளையும் அதன் தொழிற் சங்கங்களும் தமது மேதினக் கொண்டாட்டங்களை ரத்துச் செய்துள்ளன.

மாவட்டச்செயலாளர் திரு. ஏ. வயித்திலிங்கம் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

# "தமிழ் இனத்தின் கவசம் பறிக்கப்பட்டுவிட்டது"

## சுயாட்சிக்கழகத் தலைவர் துக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்



திரு. செல்வநாயகம் ஒருவருக்குத்தான் தென்னிலங்கை உண்மையாகப் பயந்திருந்தது. அவரின் மறைவுஇனத்தின் கவசத்தைப் பறித்தது போல் ஆகிவிட்டது.

இவ்வாறு மூதறிஞர் மறைவுக்கு சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் விடுத்துள்ள அஞ்சலி செய்தியில் குறிப்பிட்டுள்ளார் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் மறைவு நம்மை சோகத்தில் மட்டும் ஆழ்த்தவில்லை., திக்கற்றவர்களாகவும் ஆக்கிவிட்டது. கடந்த கால் நூற்ருண்டு காலமாக நமது அரசியல் வானிலே சூரியன்போல் பிரகாசித்துக் கொண்டிருந்த சுடரொளி தான் திரு. செல்வநாயகம் தமிழ்மக்களுக்கு வெளிச்சத்தை மாத்திரம் கொடுக்க

(7ம் பக்கம் பார்க்க)


## மரண அறிவித்தல்

### திரு. வேலுப்பிள்ளை சிவசம்பு

கரம்பன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த முன்னுள் ஊர்காவற்றுறை பட்டினசபைத் தலைவரும் மாங்குளம் வர்த்தகருமான திரு. வேலுப்பிள்ளை சிவசம்பு காலமானுர். இவர் கமலாதேவியின் அன்புக்கணவரும் திருமதி நாகேஸ்வரி சின்னத்தம்பி, குலேந்திரன் (மக்கள் வங்கி, பிரதேச பிரதான காரியாலயம், யாழ்ப்பாணம்), செல்வி தனலட்சுமி (மாங்குளம் அ. த. க. பாடசாலை) செல்வி விஜயலட்சுமி (ஒலுமடு அ. த, க. பாடசாலை), செல்வி யோகேஸ்வரி (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)) செல்வி ராஜேஸ்வரி (மானிப்பாய் இந்துக்கல்லூரி) செல்வன் மகேந்திரன் (இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்) இவர்களின் அன்புத்தந்தையும், க. சின்னத்தம்பியின் மாமனுருமாவார். ஈமக்கிரியைகள் 28-4-77 வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் கரம்பன் மயானத்தில் நடைபெறும்.

6042



மறைந்த

தன்னிகரற்ற தலைவருக்கு

எமது



அஞ்சலி

— ரோரு ஸ்தாபன ஊழியர்கள் —



தமிழ்த் தலைவர் ஈழத்து காந்தி தந்தை செல்வாவுக்கு



எமது அஞ்சலி

கணேசன் ஸ்ரோர்ஸ்

(பிரபல பிடவைமாளிகை)

63, 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி:7169

6057


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna) Telegrams Eelanaadu, Telephone 389. Registered as Newspaper in Sri Lanka.